சுருக்கம்

கல்லூரிக் கல்வித் துறை – தன்னாட்சி அரசு கல்லூரிகளில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் நியமனம் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் நிர்ணயம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

உயர் கல்வி (எப்1) துறை

அரசாணை (நிலை) எண்.51

நாள் 3.4.2012
பங்குனி, 21
திருவள்ளுவர் ஆண்டு, 2042

படிக்கப்பட்டவை:

கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித எண்.28240/க்யூ3/10, நாள் 29.12.2010, 2.2.2011 மற்றும் 7.3.2011.

------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தற்போது 20 அரசு கல்லூரிகள் தன்னாட்சி அந்தஸ்து பெற்று செயல்பட்டு வருகின்றன என்றும் இவைகளில் கீழ்க்கண்ட நான்கு கல்லூரிகளுக்கு மட்டுமே முழுநேர தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து இக்கல்லூரிகளில் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் நியமனம்- செய்வது தொடர்பாக கீழ்க்காணும் கருத்துருவினை கல்லூரிக்கல்வி இயக்குநர் அனுப்பியுள்ளார்:–

1. மாநிலக் கல்லூரி, சென்னை 5
2. இராணி மேரிக் கல்லூரி, சென்னை 4
3. அரசு கலைக்கல்லூரி, கும்பகோணம்
4. அரசு கலைக்கல்லூரி, கோயம்புத்தூர்.

மேற்காண் 4 த்ன்னாட்சி கல்லூரிகளை தவிர, ஏனைய தன்னாட்சி கல்லூரிகளில் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் பதவியை கூடுதலாக, துறைபணிகளோடு சேர்த்து பகுதிநேர தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலராக சிலர் செயல்பட்டு வருகின்றனர் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. தன்னாட்சி கல்லூரிகளில் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் பதவி இரண்டாண்டு காலம் முடிந்தபின்னர், கல்லூரி முதல்வர்களிடமிருந்து அப்பதவிக்கு விருப்பமுள்ள விரிவுரையாளர்களின் பெயர்பட்டியல் பணிமூப்பு அடிப்படையில் பெறப்பட்டு, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பதவிக்கு ஒருவரை நியமனம் செய்ய ஆணை வழங்கப்பட்டு வருகிறது எனவும், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பதவிக்கென வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் ஆணைகள் ஏதும் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்தோ, அரசிடமிருந்தோ பெறப்படவில்லை எனவும், தன்னாட்சி அரசு கல்லூரிகளுக்கு தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், கல்லூரிக் கல்வி இயக்குநரால் நியமனம் செய்யப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது எனவும், கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். அரசிடமிருந்தோ, பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்தோ சரியான வழிக்காட்டி நெறிமுறைகள் இல்லாததால், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலரை நியமிப்பதில் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்து தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் நியமனத்திற்காக கீழ்க்காணும் வழிமுறைகளை பின்பற்றலாம் எனவும், தெரிவித்து, அதன் மீது உரிய ஆணையினை வழங்குமாறும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.